19th August 1961]

Manure

*1266 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது ராஜ்யத்தில் பசுந்தாள் உரம் பயிர் செய்வதற்கான முன்னோடித் திட்டத்தின்கீழ் எந்தெந்தக் காடுகளில் அதை பயிர் செய்ய உத்தேசம், ஜில்லாவாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement [a] is placed on the table of the House.

*1267 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் கம்போஸ்ட் உரம் திறமையாக தயாரிக்கப்பட்டது என்பதற்காக எந்தெந்த நகர சபைகள், பஞ்சாயத்து போர்டுகளுக்கு வெகுமதி அளிக்கப்பட்டன ?

(இ) என்ன என்பதைப் பற்றிய விவரம் மேஜைமேல் வைக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) A statement [b] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN: மேசையின் பேரில் வைக்கப்பட்டிருக்கக்கூடிய ஸ்டேட்மெண்டில் இரண்டு நகரசபைகளும், பத்து பஞ்சாயத்து போர்டுகளும் தான் உரம் திறமையாக தயாரித்திருப்பதற்காகப் பாராட்டுப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே மேலும் ஒவ்வொரு பஞ்சாயத்து போர்டிலும், ஒவ்வொரு நகரசபையிலும் உரம் திறமையாகத் தயாரிக்கப்படுவதற்கான தீவிர முயற்சியை சர்க்கார் எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எல்லா பஞ்சாயத்து போர்டுகளும், எல்லா நகரசபைகளும் இந்த உரம் தயாரிக்க வேண்டும் என்பதற்கு அவர்களுக்கு வேண்டிய ஆதரவு எல்லாம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களுக்குள் போட்டி வைத்து சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM: மிக மோசமாக கம்போஸ்டு தயார் பண்ணின முனிஸிபாலிட்டிகள் எவையெவை ? அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTHAVATSALAM: தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

---

a Printed as Appendix V on page 455 infra.

b Printed as Appendix VI on page 456 infra.